2. <u>திரு.பூச்சாமி, சுப்பன்காட்டுத்தோட்டம் :</u>

சம்பத்குமார் குவாரிக்கு கிழக்கு பக்கத்தில்தான் என்னுடைய தோட்டமும் உள்ளது. சுப்பன்காட்டு தோட்டம் என்று கூறுவார்கள். எனக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை, மாசு போன்ற எந்த பாதிப்பும் இல்லை, நிறைய பொதுமக்களுக்கும், மற்றவர்களுக்கும் நன்மைதான். தி/ள். சம்பத்குமார் குவாரிக்கு அனுமதி கொடுப்பதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை. நன்றி என்று கூறினார்.

3. <u>திரு.கதிர்வேல், பள்ளபாளையம் :</u>

இந்த மாதிரியான தொழிற்சாலை இருப்பதனால் பொருட்கள் எல்லாம் விலை மலிவாக கிடைக்கிறது. நான் மட்டுமே இல்லை ஊர் மக்கள் கூறுவது வருவாய்க்கு ஏற்ப கிடைக்கிறது விலையும் குறைவாக உள்ளது மிகவும் நன்மையாக உள்ளது. மிக்க நன்றி என்று கூறினார்.

4. <u>திரு.வீரக்குமார், தொட்டிபாளையம் :</u>

ஐயா, நான் முத்தூர்பாளையம் 5 வது வார்டு கவுன்சிலர் இந்த கிரசர் எல்லை பேரூராட்சியில் வருகிறது. இந்த கிரசர் குவாரி அமைவதனால் எங்களுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை நீர் மாசு எந்த மாசும் இல்லை. அனுமதி கொடுக்கலாம் என்று கூறினார்.

5. <u>திரு.S.கேசவன், தொட்டியபாளையம்:</u>

இந்த குவாரிக்கு அனுமதி கொடுப்பதனால் எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

6. <u>திருமதி.K.சுதா. தொட்டியபாளையம்:</u>

அனுமதி கொடுக்கலாம் இது தப்பானது இல்லை. ஆனால் மக்களை அழைத்து போராட்டம் செய்கின்றேன் என்று பேசிக்கொண்டு இருந்தார்கள், சமூக ஆர்வலர்கள் மக்கள் யாராவது வந்தால்தானே போராட்டம் செய்யலாம். தொந்தரவு இருந்தால்தானே வருவார்கள் நல்லா இருக்கும்போது எதுக்கு வருகிறார்கள் என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

7. <u>திரு.கோபால், அஞ்சூர் :</u>

அனைவருக்கும் வணக்கம் நான் கூறியதுபோல கிரசர் அவர்கள் நடத்திக்கொண்டு இருப்பதால் பொதுமக்களுக்கு நன்மை மட்டுமே கெடுதல் கிடையாது. நான் மூன்று முறை தலைவராக இருந்துள்ளேன் கூட்டமைப்பு தலைவராக இருந்துள்ளேன். திரு.வெங்கடேசன் ஐயாவிடமும் கேட்கலாம் அவர் என் மீது மதிப்பு வைத்து தலைவரே நீங்கள் கிரசரை நல்லமுறையா பார்த்துக்கொள்ளுங்கள் கூறினார். அதன் அடிப்படையில் அனைவரையும் அழைத்துச்சென்று கிரசர் வைத்து அதன்படி பின்பற்ற கூறி மரம் நடுங்கள், ஸ்பிரிங்லா போட்டு புகை வராதபடி நீர் பாய்ச்சுங்கள் என்று கூறினேன் அவர்கள் செய்தார்கள் நான் மரம் வைத்து இருபது வருடம் ஆகிறது மூன்றுமுறை தலைவராக இருந்து வைத்த மரங்கள் எல்லாம் ஏதோ ஒரு சூழ்நிலைகளினால் காய்ந்துவிட்டது மீண்டும் அனுமதி கொடுக்கும்போது மரம் வையுங்கள் ஸ்பிரிங்லர் போடுங்கள் நான் கிரசர் உரிமையாளரிடம் வேண்டிக்கொள்கிறேன். பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் செய்ய வேண்டும் என்று கூறுவேன் அதன்படி நடந்து கொண்டுள்ளார்கள். அஞ்சூர் ஊராட்சியில் கிரசரினால் நிறைய பொதுமக்கள் ஓட்டுனராக போகிறார்கள் கிரசரில் வேலை செய்ய செல்கிறார்கள், கணக்குப்பிள்ளையாக வேலை பார்க்கிறார்கள் பல குடும்பத்தை காப்பாற்றி கொண்டுள்ளார்கள். அதனால் இந்த கிரசருக்கு அனுமதி கொடுப்பதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை. அதே சமயம் என்ன குறை உள்ளதோ குறையை சரி செய்யுமாறு கூறி அதன் அடிப்படையில் அனுமதி கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

8. <u>திரு. முருகேசன், குழந்தைப்பாளையம் :</u>

வணக்கம். நான் முருகேசன் பேசுகிறேன். இந்த குவாரிக்கு அனுமதி கொடுக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

9. <u>திரு. மணீஷ், வேலாயுதம்பாளையம் :</u>

சம்பத்குமார் குவாரிக்கு அருகில் உள்ள தோட்டம் என்னுடையது. இந்த குவாரிக்கு அனுமதி கொடுப்பதற்கு எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

10. <u>திரு. கவிசங்கர் வேலாயுதம்பாளையம் :</u>

நான் கவிசங்கர். சம்பத்குமாருடைய குவாரியை ஒட்டியே எங்களுடைய வேலாயுதம்பாளையம் ஊர் உள்ளது. இந்த குவாரியினால் எங்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை. இவர்கள் மக்களுக்கு பயனுள்ள

வகையில் இருக்கிறார்கள். அதனால், எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை. நீங்கள் குவாரிக்கு அனுமதி வழங்கலாம். நன்றி என்று கூறினார்.

11. <u>திரு. மூர்த்தி, சாம்பன்காட்டுத்தோட்டம்</u> :

இந்த குவாரிக்கு அனுமதி கொடுப்பதற்கு எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

12. <u>திரு. பழனிச்சாமி, பச்சகாட்டுத்தோட்டம் :</u>

என் பெயர் பழனிச்சாமி. இந்த சம்பத்குமார் குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறிக்கொள்கிறேன் என்றார்.

13. <u>திரு. துரைசாமி, தாதர்க்காடு</u> :

வணக்கம். என் பெயர் துரைசாமி. இப்பொழுது நண்பர் 2 பேர் வந்து பேசினார்கள். இந்த குவாரிக்கு அனுமதி கொடுக்கலாம் என்றால், 45 வகையான ஆவணங்கள் வேண்டும் என்றார். 45 வகையான ஆவணங்கள் வேண்டும் என்றால், தமிழ்நாட்டில் ஒரு கிரஷரும் ஓடாது. தமிழ்நாட்டில் ஜல்லி, மண் என்று எதுவும் கிடைக்காது. யாரும் வீடு கட்ட முடியாது. தேவையில்லாததை ஏன் செய்து கொண்டிருக்கிறீர்கள் ? ஊற்று தோண்டி நல்ல நீரை குடித்துக்கொண்டிருந்தார்கள். திருப்பூரில் இருநது சாய பட்டறையிலிருந்து 3000 PPM வருகிறது. இதை அப்படியே காட்டுக்குள் கொண்டுபோய் விட்டால் அனைத்துப் பயிர்களும் காய்ந்து போய் விடும். அதை சென்று பார்க்க வேண்டியது தானே. 30 வருடமாக 10 கிரஷரை வைத்துக் கொண்டு எத்தனை குடும்பத்தை காப்பாற்றுகிறார்கள். எத்தனை பேர் வாழ்கிறார்கள் ? அதிலும் எத்தனை பேர் 20 ஆயிரம் ஏக்கர் 30 ஆயிரம் ஏக்கர் கலராகப் போய், அந்த ஏரியா முழுவதும் மூடிவிட்டார்கள். அதைச் சென்று பாருங்களேன். ஒரு சமூக சேவகர் அதை சென்று பாருங்கள். அதை விட்டு நான்கு பேரை பிழைக்க வைக்கிறவரை ஏன் கெடுக்கிறீர்கள் ? இது மாதிரி செய்யாதீர்கள். நன்றி என்று கூறினார்

14. <u>திரு. சுப்பிரமணியன், பிள்ளபாளையம் :</u>

என் பெயர் சுப்பிரமணியன் இந்த குவாரிக்கு அனுமதி கொடுப்பதற்கு எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

15. <u>திரு. சதாசிவம், அஞ்சூர் :</u>

என் பெயர் சதாசிவம். இந்த சம்பத் குமார் குவாரிக்கு அனுமதி கொடுப்பதற்கு எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

16. <u>திரு. நல்லசிவம், அஞ்சூர் :</u>

இந்த குவாரிக்கு அனுமதி கொடுப்பதற்கு எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

17. <u>திரு. ந. சண்முகம், சட்ட விரோத கல் குவாரி எதிர்ப்பு இயக்கம், கரூர் :</u>

என்னுடைய பெயர் சண்முகம் நான் கரூரில் இருந்து வந்துள்ளேன். கரூர் மாவட்டம், புகளூர் வட்டம், அஞ்சூர் கிராமம், புல எண்.262/2, 3, 263/2,3 ஆகியவற்றில் 4.81 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள சம்பத்குமார் கல்குவாரிக்கு கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கும் துணை ஆட்சியர் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும்

முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன். அரசு சில விதிமுறைகளை வகுக்கிறது. மனிதன் எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்றால், அப்படியே வாழலாம். மனிதன் நாகரீகமாக வாழ வேண்டும் என்பதற்காத்தான் சில இயற்கைகளை அழிக்கக் கூடாது என்பதற்காகத்தான் சில சட்ட வரைமுறைகளை வகுத்துள்ளார்கள். அந்த சட்ட வரைரறைகளின் படி, ஒரு குவாரி இயங்குமானால் அதனை நாங்களும் ஆதரிப்போம். ஆனால், தமிழ்நாட்டில் எந்தக் குவாரியும் சட்ட வரைமுறைப்படி இயங்குகிறதா என்றால், எந்த குவாரியும் சட்ட விதிப்படி இயங்கவில்லை. அதன் அடிப்படையில் தான் தமிழ்நாடு அரசு இதுபோன்ற தவறுகள் நடக்கக் கூடாது என்பதற்காகத்தான் பொதுமக்களைக் கூட்டி அவர்களிடம் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்தி, கருத்துக்களை கேட்டு அதன் அடிப்படையில் இந்த குவாரிகளுக்கு அனுமதி கொடுக்க வேண்டும் என்று அரசு விதிமுறை வகுத்துள்ளது. தமிழ்நாடு சிறு கனிம விதிகள் என்ன கூறுகிறது என்றால், சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் 45 வகையான ஆவணங்கள் எதற்கு இணைக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். இந்த விதிகள் இல்லையென்றால், எவர் வேண்டுமானாலும் ஆங்காங்கே வெடியை வைத்து கல்லை உடைத்து விற்பார்கள். பொருளாதாரம் என்பது சட்டப்படி சம்பாதிக்க வேண்டும். திருட்டுத்தனமாக சம்பாதிக்கக் கூடாது என்பதற்காகத்தான் இந்த விதிமுறைகளை அரசு வகுத்திருக்கிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் எதுக்காக உருவாக்கப்பட்டிருக்கிறது.

மக்கள் அனைவரும் அமைதியுடனும், நேர்மையுடனும், சுய மரியாதையுடனும், சுதந்திரத்துடனும் வாழ வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்டது. சில மனிதர்கள் வாழ்வதற்காக மட்டும் உருவாக்கப்படவில்லை. அப்பொழுது சட்டத்தின் அடிப்படையில் தான் குவாரிகள் இயங்க வேண்டும் என்பது விதிமுறை. அந்த விதிமுறைப்படி தான் 45 வகையான ஆவணங்கள் என்றால், 45 அதிகாரிகளின் ஆவணங்களும் அதில் இணைக்க வேண்டும். இணைத்தால் மட்டுமே இந்த குவாரி உண்மையானது என எங்களால் உறுதி செய்ய முடியும். கிராம வரைபடத்தையே நீங்கள் வைக்கவில்லை. அது இல்லை என்றால் சுற்றுப்புறச்சூழல் பாதிப்பு அஞ்சூர் கிராமத்திற்கு மட்டுமில்லாமல், தமிழ்நாடு முழுவதற்குமே பாதிப்பு ஏற்படும். இந்த காற்று மாானது கிழக்குப் பகுதி மற்றும் மேற்குப் பகுதி எந்த திசையில் காற்றடிக்கிறதோ அங்கு பரவி மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும். நீர் மாசு என்றால, நீர் இங்கு மட்டும் மாசு அடைவதில்லை. எல்லாப் பகுதியிலும் நீர் மாசடையும். அதே மாதிரி ஒலி மாசு என்றால், வெடி வைத்தால் எல்லாப் பகுதியிலும் ஒலி மாசாகும். எல்லா மாசையும் தடுக்க வேண்டும் என்பதற்காகத் தான் இந்த திட்ட சுற்றறிக்கை தயார் செய்கிறார்கள். இந்த அறிக்கையில் இவ்வளவு ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும் என தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகள் கூறுகிறது. சட்டப்படி எல்லாம் நடந்தால் நாங்கள் ஏன் இங்கு வந்து பேசப் போகிறோம். ஒரு குவாரி எப்படி நடக்க வேண்டும் என்பதைத்தான் நாங்கள் இங்கு வந்து பேசுகிறோம். விதிகளை மீறி இயங்கக் கூடாது என்று அரசு சொல்கிறது. எதற்கு Digital Survey செய்கிறார்கள். நீதிமன்ற உத்தரவைப் போட்டு ஏன் குவாரியை மூடுகிறார்கள். பல்வேறு இடங்களில் சட்டவிரோதமான குவாரிகள் இயங்குகிறது. 15 மீ ஆழம் என்று கூறினால் 50 மீ ஆழத்திற்கு வெட்டி எடுக்கிறார்கள். அப்பொழுது அரசின் கனிமங்கள் கொள்ளையடிக்கப்படுகிறது. ஒரு நிலத்தின் 3 மீ அளவுதான் அந்த நிலத்தின் உரிமையாளருக்குச் சொந்தம். அந்த நிலத்திதன் கனிமங்கள் அனைத்தும் அரசுக்குச் சொந்தம். அந்த அரசு சில

விதிமுறைகளை வகுத்துள்ளது. அந்த விதிகளின் படியே குவாரிப் பணியைச் செய்ய வேண்டும். அதற்காகத்தான் மக்களிடம் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்துகிறார்கள்.

ஆனால், 45 வகையான ஆவணங்கள் இல்லை. நாங்களும் தொடர்ந்து கேட்டுக் கொண்டுதான் இருக்கிறோம். திட்ட வடிவமைப்பாளரும் கூறிக் கொண்டுதான் இருக்கிறார். ஆனால், ஆவணங்களை வைப்பதில்லை. அவர்களும் SEIAA –ல் கேட்டார்கள். எல்லா அறிக்கையும் இருக்கிறது. தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகள் 1959 –லேயே இருக்கிறது. அதில் என்னென்ன ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும் என்று இருக்கிறது. ஒரு குடும்ப அட்டை பதிவு செய்கிறீர்கள். உடனே உங்களுக்கு கையெழுத்துப் போட்டு கொடுக்க மாட்டார்கள். ஐயா இருக்கிறார் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பாக (இடையில் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் குவாரி சம்பந்தமாக மட்டுமே பேசுமாறு கூறினார்) பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இருக்கிறீர்கள் என்றால், நீங்கள் இலவசப் பட்டா வாங்க வேண்டும் என்றால் எவ்வளவு ஆவணங்கள் கேட்கிறீர்கள். ஏனென்றால், அதுதான்விதி. அரசின் விதிகளை கடைபிடிக்க வேண்டும் என்பது அனைவருக்குமான உரிமை. இதில் 45 வகையான ஆவணங்கள் இணைக்கப்படவில்லை. 7 வகையான ஆவணங்கள் மட்டுமே இணைக்கப்பட்டிருக்கிறது. எனவே, எவ்வித கருத்தும் சொல்ல முடியாது. கிராம வரைபடமே இல்லை. ஒரு கிராமத்தில் கிராம வரைபடம் இருக்க வேண்டும் என்பது எங்களுடைய நோக்கம். ஆனால், கிராம வரைபடமே இல்லை என்றால், எப்படி எங்களால் கருத்துச் சொல்ல முடியும். குவாரியின் மேற்கு, கிழக்கு, தெற்கு மற்றும் வடக்குப் பகுதியில் பார்த்தால் (இந்த நேரத்தில் குவாரியின் ஆதரவாளர்கள் அவரை பேச விடாமல் தடுத்தனர். மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களை பேச விடுங்கள் என்று கூறினார்) திரு. சண்முகம் அவர்கள் தொடர்ந்து பேசினார். 300 மீட்டர் சுற்றளவிற்கு அங்கீகரிக்கப்பட்ட வீடுகள், வீட்டு மனைகள் எல்லாம் இருக்கிறது. இது Google வரைடத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

அப்பொழுது ஒரு வீடு 300 மீட்டர் சுற்றளவிற்குள் இருக்கும் பொழுது, ஒரு குவாரி அமையுமானால், வீடு, வீட்டு மனைகள், நீர் நிலைகள் இருந்தால் அந்த குவாரிக்கு அனுமதி கொடுக்கக்கூடாது என்று கூறலாம். இந்த குவாரிக்கு அருகில் 300 மீட்டருக்குள் 4 வீடுகள் இருக்கிறது. எனவே, அனுமதி தரக்கூடாது. 500 மீட்டர் சுற்றளவில் தண்ணீர் எடுக்கக்கூடிய நீர்நிலைத் தொட்டி இருக்கிறது. Google வரைபடத்தில் எல்லாமே இருக்கிறது. கிராம வரைபடத்தில் கொடுக்கவில்லை. கொடுத்திருந்தால் எல்லாவற்றையும் எங்களால் விளக்கமாகச் கூற முடியும். மாநில நெடுஞ்சாலையிலிருந்து 50 மீட்டர் தள்ளித்தான் குவாரி இருக்க வேண்டும். இது ஏற்கனவே இயங்கிய குவாரிதான். 50 மீட்டர் இடைவெளியே கிடையாது. அருகில் தான் உள்ளது. மின் பாதை சென்றாலும் 50 மீட்டர் இடைவெளி தேவை. அதுவும், இங்கு கடைபிடிக்கப்படவில்லை. எனவே, எந்த விதத்திலும் இந்த குவாரிக்கு அனுமதி கொடுக்கக் கூடாது. கொடுக்க முடியாது. இந்த திட்ட வரைடத்தில் பார்த்தீர்கள் என்றால், குப்புசாமி குவாரிக்கு எல்லை காண்பித்திருந்தார்கள். இந்த குவாரிக்கு காண்பிக்கவில்லை. ஒரே திட்ட வடிவமைப்பாளர்தான் உருவாக்குகிறார். ஒரு குவாரிக்கு அனைத்தும் போட்டிருக்கிறார். மற்றொரு குவாரிக்கு எதுவும் போடவில்லை. இதில் ஆய்வக அறிக்கை வைக்கவில்லை. காற்று மாசு, நில மாசு, நீர் மாசு, மண் மாசு, பல்லுயிர்ச்சூழல் இதெல்லாம் எப்படி பாதிக்கும் என்பதை இவர்கள் ஆய்வக அறிக்கை என்கிறார்கள். அந்த ஆய்வக அறிக்கை எங்கு எங்கு எடுத்தார்களோ, அந்த ஆய்வு அறிக்கை

வைக்கப்படவில்லை. பல்வேறு விதமான ஆவணங்கள் இணைக்கப்படாததால், பல்வேறு விதமான முறைகேடுகள் உள்ளதால் தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிப்படி 300 மீட்டர் சுற்றளவில் வீடுகள், வீட்டு மனைகள் இருப்பதால் இந்த குவாரிக்கு எக்காலத்திலும் அனுமதி கொடுக்கக் கூடாது. அனுமதி கொடுக்க முடியாது. நன்றி. வணக்கம் என்று கூறி தன் உரையை முடித்துக் கொண்டார்.

18. திரு. முகிலன், ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம், கரூர்:

கரூர் மாவட்ட நிர்வாகமும், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியமும் இணைந்து நடத்துகின்ற புகழூர் வட்டம், கரூர் மாவட்டம், அஞ்சூர் கிராம புல எண்கள். 759, 761, மற்றும் 762 ஆகியவற்றில் 4.81 ஹெக்டேர் சுமார் 12 ஏக்கர் பரப்பளவில் அமைய இருக்கக் கூடிய சம்பத்குமார் அவர்களுடைய நிறுவனத்தின் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தினுடைய தலைவர் மரியாதைக்குரிய மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் கரூர் கோட்டாட்சியர்(பொறுப்பு) அவர்களுக்கும் முன்னிலை வகித்துக்கொண்டுள்ள எங்களின் மரியாதைக்குரிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும் இங்கே பங்கெடுக்க வந்துள்ள அதிகாரிகள், பத்திரிக்கையாளர்கள், கல் குவாரி உரிமையாளர்கள், கல்குவாரி உரிமையாளர்களுக்கு நெருக்கமானவர்கள் இந்தப்பகுதி பொதுமக்கள், சமூக செயல்பாட்டாளர்கள் ஆந்திராவில் இருந்து இங்கே வந்து குவாரி வேண்டுமென்று அறிக்கை கொடுப்பதற்காக வந்துள்ள அனைவருக்கும் வணக்கத்தையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். தொடங்கும் முன்பு ஒரு செய்தியை மட்டும் கூறிக்கொள்கிறேன். 45 வகையான ஆவணங்கள் என்ன என்று சிலர் கேட்டு துடித்துக்கொண்டிருக்கிறார்கள் நல்ல செய்தி. 45 வகையான ஆவணங்களைத் தெரிவிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். கூடுதலாக அரைமணிநேரம் எங்களுக்கு பேசுவதற்கு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அளித்தால் நான் கூறுகிறேன். இந்தக் கல்குவாரி கருத்துக்கேட்புக்கூட்டம் தொடங்குவதற்கு முன்பாக சட்டவிரோத கல்குவாரி ஏழு ஆண்டுகள் நடந்ததற்காக மரியாதைக்குரிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் உங்களிடம் கூறி கல்குவாரியை மூட வைத்ததற்காக மூன்றே நாட்களில் படுகொலை செய்யப்பட்ட இதே வட்டத்தில் இருக்கக்கூடிய காளிபாளையம் விவசாயி ஜெகநாதனுக்கு வீர வணக்கத்தை கூறி எனது உரையைத் தொடங்குகிறேன். அமையக்கூடிய குவாரி புலம் என்பது முதலில் நான் பலமுறை கூறியிருக்கிறேன் சென்ற குவாரியில் எதுவும் பகுதி கிடையாது.

ஆனால் இந்தக் குவாரியில் 3 சைட் பகுதி 1 செண்ட் நிலம் ஒருவர் பட்டா செய்கிறார்கள், மாற்றுகிறார்கள் என்றால் உட்பிரிவு செய்கிறார்கள். ஆனால் கல்குவாரி உரிமையாளர் மட்டும் தொடர்ச்சியாக பகுதி என்று எந்தவிதமான உட்பிரிவுகளையும் செய்யாமல் கொடுப்பதால் அதிகாரிகளினாலே பல நேரங்களில் தவறுகள் நடக்கும்போது கண்டுபிடிக்க முடியாமல் சென்றுவிடுகிறது. நாங்கள் உங்களுக்கும் கூறுகிறோம், அமைச்சருக்கும் கூறுகிறோம் மற்ற அதிகாரிகளுக்கும் நாங்கள் கூறிக்கொண்டுதான் உள்ளோம். அதாவது உட்பிரிவு செய்யவேண்டிய வேலைகளை செய்துவிட்டு குவாரிகளுக்கு கருத்துக்கேட்புக்கூட்டம் நடத்துங்கள் அடுத்ததாக இந்தக் குவாரி கருத்துக்கேட்புக் கூட்டத்தைப் பொறுத்தவரையில் இதற்குப் பொதுவிதி என்பது ஏதோ முகிலனுடைய விருப்பமோ மற்றவருடைய விருப்பமோ அல்ல, சிறுகனிம சலுகை விதி 1959தான் இதற்குப் பொதுவானவிதி ஒரு கூட்டத்தில் 1000 பேர் குவாரி வேண்டும் என்று கேட்கிறார்கள் ஒருவர்

மட்டும் வேண்டாம் என்று கூறுகிறார் ஒருவர் வேண்டாம் என்று கூறியும் குவாரி நின்றிருக்கிறதா? அதற்குக் காரணம் என்னவென்றால் கிரிட்டீரியா அதாவது விதிமுறைகள்படி அரசு கூறக்கூடிய வீடுகள், வீட்டுமனைகள், ஊர் நத்தம் மற்றும் நிரந்தர கட்டுமானங்கள், அரசு கட்டிடங்கள், ஓடை, பாதை மற்றும், மின்பாதைகள், பெட்ரோலிய லைன்கள், குடிதண்ணீர் லைன்கள், மேல்நிலைத்தொட்டி, கோவில், தொல்லியல் சின்னங்கள், அறநிலையத்துறை ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு இருக்க வேண்டும் என்ற விதி இந்த ஆவணத்தில் கூறியுள்ளது. இதில் குறிப்பாக பிரிவு 36 1 A தெளிவாக என்ன கூறுகிறார்கள் என்றால் கல்குவாரி அமையக்கூடிய புலத்தில் இருந்து 300 மீட்டர் சுற்றளவிற்குள் வீடுகள் எதுவும் இருக்கக்கூடாது. அங்கீகரிக்கப்பட்ட வீடுகள், வீடுகள் என்று கூறினால் அனைத்து வீடுகளும் கணக்கல்ல அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் என்று கூறுவது கிராம வரைபடத்தில் அல்லது புல வரைபடத்தில் அ பதிவேட்டில் மார்க்காக இருக்க வேண்டும். அதுமட்டுமில்லாமல் அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் என்பது DTCP approval , பஞ்சாயத்து approval பெற்றதாக இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் அங்கீகரிக்கப்பட்ட வீடு, இந்தப்புலத்தில் அப்படி அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் இருக்கிறதா? என்று கூறினால் இந்த நிறுவனம் வெளியிட்டு இருக்கக்கூடிய பிளாட் 1 C யில் பார்த்தீர்களேயானால் வீடுகள் உள்ளது அவர்கள் கொடுத்த ஆவணங்களிலே உள்ளது.

புலவரைபடங்களில் உள்ளது மரியாதைக்குரிய கிராம நிர்வாக அலுவலர் வழக்கம்போல் கிராம வரைபடத்தை கொடுத்தார்களா? இல்லையா? என்று தெரியவில்லை? திட்டவடிவமைப்பாளர் வைக்கவில்லை. அவர் நான் அதைச்செய்கிறேன் இதைச் செய்கிறேன் என்கிறார். ஆனால் வைக்கவில்லை Topo Sketch மட்டும் வைத்துள்ளார். இதில் பக்க எண்.378 கிராம நிர்வாக அலுவலர் ஒரு கையெழுத்துப் போட்டுள்ளார் என்ன அறிக்கை கொடுத்துள்ளார் என்றால் குவாரி அமையக்கூடிய புலத்தில் இருந்து சுமார் 300 மீட்டர் சுற்றளவில் அங்கீகரிக்கப்பட்ட வீட்டு மனைகளோ, கிராம நத்தமோ, நீர் நிலை மற்றும் புறம்போக்கோ, புராதன சின்னங்களோ, பள்ளியோ, மயானமோ, கோவிலோ, சர்ஜ், மசூதி ஏதும் இல்லை என சான்று வழங்கப்படுகிறது என்று 11.03.2023ல் கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த சான்று நீங்கள் அனைவரும் வந்திருக்கிறீர்கள் உங்களுடைய வீடுகளில் பலருடைய வீடுகள் 300 மீட்டர் சுற்றளவிற்குள் இருக்கின்றது. அப்பொழுது இப்படி இருக்கும்போது இதனை மறைத்துவிட்டு கிராம நிர்வாக அலுவலர் கொடுத்திருக்கிறார் என்று கூறினால் பசுமை வீடுகள் பலவும் இருக்கின்றது. SEIAA வின் விதி உள்ளது. அதிகாரி கொடுத்ததற்காக அனைத்தும் சரியானது அல்ல. அதிகாரி சட்டப்படி கொடுத்திருக்கிறார் என்று பார்த்தால் கிராம நிர்வாக அலுவலர் தவறான சான்றிதழை இவருக்கு கொடுத்திருக்கிறார். A1 நோட்டீஸ் எங்கே? A1 நோட்டீஸ் பொதுமக்கள் கருத்துக்கேட்பு எங்கே? கருத்தைப்பற்றிய கிராம நிர்வாக அலுவலர் சான்று எங்கே? அதைப்பற்றிய வருவாய் அலுலவர் சான்று இங்கு புலத்தணிக்கை செய்த வட்டாட்சியர், கோட்டாட்சியர், AD Mines சான்று எங்கே? இதே ஆவணங்கள் 10 வந்துவிட்டது. இந்த ஆவணங்கள் எதுவும் இந்த அறிக்கையில் இல்லை. இந்த ஆவணங்கள் இருந்தால்தான் அதிகாரி உண்மையைக் கூறினாரா? பொய்யைக் கூறினாரா? என்று தெரியும். இது கம்பெனிக்காரர் கொடுத்த சான்று அதிகாரிகள் கொடுத்த சான்று இல்லை. நாங்கள் அதிகாரிகளுடைய சான்றை கேட்பது 45 வகையான ஆவணங்கள் என்று கூறும்பொழுது அவர்கள்

இந்த அடிப்படையில் கொடுத்திருக்கிறார்களா? அதிகாரி கொடுக்கவில்லை. திட்டவடிவமைப்பாளர் கொடுத்திருக்கிறார். மாவட்ட ஆட்சித்தலைவர் கையெழுத்தை ஒரு குவாரிக்காரர் போட்டுக் கொடுத்து பிடித்துக்கொடுத்தோம். கிராம நிர்வாக அலுவலர் கையெழுத்தைப் போலியாக போட்டுக்கொடுத்தார்கள் என்று வரவணையில் ஒரு வழக்கு ஓடிக்கொண்டிருக்கிறது இப்படிப் பல தவறுகள் இருப்பதால்தான் உரிய ஆவணங்களை வையுங்கள் என்று கூறுகிறோம். நீங்கள் குவாரிக்காரராக இருக்கலாம், குவாரிக்காரருக்குத் தெரிந்தவராக இருக்கலாம். நாங்கள் கேட்டது சட்டப்படி ஆவணங்களை வைத்துவிட்டால் முடிந்தது. அதிகாரிகள் மீது தவறு இருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியும். திட்ட வடிவமைப்பாளர் மேல் தவறு இருந்தால் என்ன நடவடிக்கை எடுக்க முடியும். 45 ஆவணங்கள் எனக்குத் தெரியவில்லை என்கிறார். அவர் கிட்டத்தட்ட 35வது கூட்டத்தில் கலந்துகொள்கிறார். 35 கூட்டத்தில் எழுத்துப் பூர்வமாகவும் சரி, பேச்சிலும் சரி எத்தனை பதிவு இருக்கிறது. சுருக்கறிக்கை அனைத்தும் எடுங்கள் அனைத்திலும் இருக்கும் குவாரிக்காரரைத் திருப்திபடுத்துவதற்காக பொய்கூறக்கூடாது. 45 வகையான ஆவணங்கள் பற்றி சென்றவாரமே மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் ஆகியோளர்களிடம் அறிக்கை கொடுத்துவிட்டோம். 45 வகையான ஆவணங்கள் இல்லை என்னென்ன ஆவணம் இருக்கின்றது எந்த வகையான ஆவணங்கள் இல்லை என்று கொடுத்திருக்கிறோம். நீங்கள் அதை பரிசீலனை செய்திருக்கிறீர்களா? எதுவும் கிடையாது? யாரையோ ஒருவரை திருப்திபடுத்துவதற்காக தவறான விளக்கங்கள் நீங்கள் கூறக்கூடாது. அவர் முதன்முதலில் பங்கேற்கும் கூட்டமில்லை. 35 வது கூட்டம் 35 கூட்டத்திலேயும் நீங்கள் இதைத்தான் செய்கிறீர்கள். சென்னிமலையில் பிறந்தேன் கரூரில் உள்ளேன். நான் முத்தூரிலும் 4 வருடங்கள் இருந்தேன். அதற்காக முத்தூர் என்று கூற முடியுமா? பிரச்சனைகளைப் பேசக்கூடாது, நான் சென்னிமலையில் பிறந்தவன், கரூரில் இருக்கிறேன் இருக்கின்ற இடத்தைக் கூறுகிறேன் உங்களுக்கு என்ன பிரச்சனை இதில். எனது முகவரிக்கு கடிதம் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள் 45 வகையான ஆவணங்களில் அடுத்ததாக தொல்லியல் சின்னம் என்று கூறினேன். கொடுமுடி தொல்லியல் சின்னம் உள்ளது. முத்தூர் பல்வேறு அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள கோவில். ஏன் அறநிலையத்துறை? தொல்லியல்துறை கடிதம் கொடுக்கவில்லை PWD பற்றிக்கேட்டேன். 100 வது மீட்டருக்குள்ளேயே PWD வாய்க்கால் செல்கிறது. PWD பற்றி கூறி இருக்கிறார்களா? பாலம் இருக்கக்கூடாது என்று முகிலன் கூறவில்லை தெளிவாக அந்த நிறுவனம் கூறுகிறது பாலம் 500 மீட்டரில் மத்திய அல்லது மாநில அரசு நிறுவனங்களால் தண்ணீர் எடுக்கின்ற இடங்கள் ஊராட்சியால் தண்ணீர் எடுக்கின்ற இடங்கள் குடிநீர் வடிகால் வாரியத்தால் தண்ணீர் எடுக்கின்ற இடங்கள் இருக்கக்கூடாது என்று சிறுகனிம சலுகை விதிகள் 1959 கூறுகிறது. ஆனால் இங்கு 500 மீட்டருக்கள் 2 பாலங்கள், சாலிகாட்டுப் பள்ளத்துக்குள் PWD பாலம் உள்ளது.

300 மீட்டரிலேயே NRS உடைய பாலம் உள்ளது. அதுமட்டுமல்லாமல் குடிதண்ணீர் எடுக்கின்ற தொட்டி உள்ளது. பசுமைவீடுகள் பல உள்ளது. இதையெல்லாம் மறைத்துத்தான் நாங்கள் எதற்காகக் கேட்கிறோம் என்றால் இங்கு டவர்லைன் வருகிறது. 833 வழியாக 831ல் உயர்மின் கோபுரம் வருகிறது. உயர்மின் கோபுரம் அமைந்தால் 300 மீட்டர் குவாரி அமையக்கூடாது Indian Electricity Act 1956 section

86 தெளிவாக கூறுகின்றது. இதற்காகவே திருப்பூரில் பல குவாரிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. அப்பொழுது இது 300 மீட்டருக்குள் டவர்லைனுக்கு இன்னும் கம்பி மட்டுமே இழுக்கவில்லை. அதனுடைய கடிதம் எங்கே என்று கேட்கிறோம் மின்சாரத்துறையில் கேட்டால் தெளிவாகக் கூறுகிறார்கள். எங்களிடம் யாரும் NOC கேட்பதில்லை. இந்த நிறுவனம் வனத்துறை கடிதம் வைக்கவில்லை. இதில் வனத்துறைக் கடிதம் இல்லை இப்படி இல்லாததை நாங்கள் கேட்கின்றோம். நீங்கள் வைக்க வேண்டியது உங்களுடைய கடமை. அனைத்து துறையிடமிருந்தும் NOC உள்ளதா? High ways சாலையை ஒட்டி இருந்தால் NOC வாங்க வேண்டும். தெற்குப்பகுதியில் கூட்டுக்குடிநீர் திட்டம் செல்கின்றது. அப்பொழுது இந்தக்குவாரி 50 மீட்டரில் வெடி வைப்பதால் அந்தக் கூட்டுக்குடிநீர் திட்டம் பாதிக்கப்படுமா? என்று NOC வாங்கியிருக்க வேண்டும் வந்த பின்னாடி பேசி என்ன இருக்கிறது?

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

நாங்கள் கூறுவது அனைவரும் சட்ட அடிப்படையில் செயல்பட வேண்டும் என்பதற்காக கூறுகிறோம். பேசியவர் யாராவது ஒருத்தராவது முகிலன் சென்னிமலையில் பிறந்து கரூரில் இருக்கிறார் என்று கூறினால் நல்லதுதான். நான் முத்தூரில் அரசுத் துறையில் வேலை பார்த்தவன். அதனால் நீங்கள் கூறுங்கள் 300 மீட்டரில் வீடே இல்லை? குவாரி சட்டவிரோமாக கற்களே எடுக்கவில்லை? கிரசர் மற்றும் எம்சாண்ட்டிற்கு வேறு பக்கம் இருந்து வருகிறது என்று கூறினார்களா? கிடையாது. உயர்நீதிமன்றம் டிசம்பர் 2021ல் கரூர் மாவட்டத்தில் 338 குவாரிகளையும் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறிய உத்தரவை அரசுத்துறை அதிகாரிகள் நீங்கள் அமல்படுத்தவில்லை. அமல்படுத்தியிருந்தால் அரசுக்கு பல ஆயிரம் கோடிரூபாய் வருமானம் கிடைத்திருக்கும் தனிப்பட்ட நபர் இந்தக்குவாரி உரிமையாளர் யார் என்று கூடத் தெரியாது? சட்ட அடிப்படையில் இருக்கிறதா? இல்லையா? என்பது பற்றிதான் பிரச்சனை. இங்கு குவாரியைப் பொறுத்தவரையில் சட்ட அடிப்படை விதி அடிப்படையில் இல்லை. தலைவர் கூறினார் 20 பேர் சேர்ந்து மரம் வைத்தோம் மூடிவிட்டது என்று இங்கு வைக்க வேண்டிய மரமே வேப்பமரம், புங்கமரம், ஆலமரம், அத்திமரம் போன்றுதான் வைக்கச் சொல்கிறார்கள். மரத்திற்கு ஒரு வருடம் தண்ணீர் விட்டு 2 வருடம் வைத்திருந்தாலே எல்லா இடத்திலும் மரம் இருக்கும் எந்தவிதத்திலும் தாங்கும். ஆனால் அப்படி எதுமே வைக்கவில்லை என்பது எதார்த்தமான பிரச்சனை வளாகத்தைச் சுற்றி எத்தனையோ மரங்கள் இருக்கின்றது. இந்தக் குவாரிகள் அப்படி வைக்கவில்லை நாங்கள் மறுபடியும் மறுபடியும் கேட்பது சர்க்கரை என்று எழுதினால் இனிக்காது உண்மையை கூறினால்தான் இனிக்கும் அந்த வகையில் இருக்கிறதா? என்ற கேள்வியைத்தான் எழுப்பினோம். அதேமாதிரி மாநில நெடுஞ்சாலைக்கு 150 மீட்டர் இடைவெளி இல்லாமல் குவாரி அமையப்பட்டிருக்கிறது. இந்தக்குவாரி 2022 ஏழாவது மாதம் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் உத்தரவிட்டு இன்றுவரை சம்பத்குமார் கல்குவாரி வேலி அமைக்கவில்லை.

அதேபோல DGMS ஆவணத்தில் எல்லைக்கல் வைக்கவில்லை அனுமதி கேட்கும்பொழுது கற்களை எடுத்துக்கொண்டு சென்று அட்சரேகை, தீர்க்கரேகை கொடுக்க வேண்டும் அப்படி

கொடுக்கவிலல்லை. இதைத்தான் கேள்வியாக கேட்கின்றோம். கேள்வி கேட்டால் கோபம் வருகிறது என்றால் நீங்கள் நியாயமாக இல்லை என்பது பொருள். நீங்கள் சரியாக இருந்தால் குவாரி பற்றி நாங்கள் பேசமுடியுமா? ஒருத்தர் கூறினார் நான் நாசமாக போய்விடுவேன் என்று ஏனெனில் இந்த மண் நாசமாகிவிடக் கூடாது என்பதற்காக இருக்கிறேன். நேற்று பெருந்துறை மாசுகட்டுப்பாடு வாரியத்தை முற்றுகையிட்டு வந்துதான் பேசிக்கொண்டிருக்கிறேன் அன்றாடம் தமிழ்நாட்டில் இந்த மண்ணைப் பாதுகாப்பதற்கே போராடிக்கொண்டிருக்கின்றோம். எங்கள் பெயரை வைத்து கரூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி போன்ற இடங்களில் எங்கள் பெயரைச் சொல்லி ஒட்டுக்கேட்டார். முகிலன் சமூகத்திற்காகப் போராடுகிறார் அதனால் தாக்குதல் நடக்கிறது, அச்சுறுத்தல் நடக்கின்றது. எனவே தெரிந்து கொண்டு பேசவேண்டும். நான் பிறந்த ஊரைத் தெரிந்துகொண்டு விட்டீர்கள் நல்ல செய்திதான். நீங்கள் என்ன செய்யவில்லை என்று தெரிந்து கொண்டு பேசவேண்டும். எங்களுக்கு தனி நலன் கிடையாது. இந்த மண் அழிந்து விடக்கூடாது இங்கு நில அதிர்வு ஏற்பட்டதில்லையா? அந்த நில அதிர்வுக்கு யார் காரணம்? 109 டிகிரி பாரன்ஹீட் ஜனவரியில் இங்கு உட்கார முடியவில்லை என்ன காரணம்? குவாரிகள் அதன்விதிப்படி இயங்காததுதான் காரணம் பல நோய்கள் உருவாகிக் கொண்டிருக்கிறது காரணம் என்னது? காற்று மாசு ஒரு பக்கம் TNPL நொய்யல் போன்ற ஆறுகளில் தண்ணீர் கலந்து மாசு ஏற்படுவது ஒரு பக்கம் இப்படி பல்வேறு மாசுபடுதலும் அனைத்தையும் எதிர்த்துப் போராட வேண்டிய தனிநபர் வாழ்க்கைக்காக இங்கு பேசவில்லை. எதிர்காலத் தலைமுறை மலட்டுத்தன்மை இல்லாமல் உண்மையான முறையில் நோய் இல்லாமல் இருப்பதற்கு பி2 டைப் சுகர் வந்து கொண்டுள்ளது. 20 வயது குழந்தைக்கு காற்று மாசினால் பி2 டைப் சுகர் வந்தால் 5 வருடத்தில் ஆண்மைத் தன்மை, பெண்மைத் தன்மை இல்லாமல் போய்விடும் இதை நான் கூறவில்லை அரசு கூறுகிறது. இப்படியான நிலைமை ஏற்பட்டுவிடக்கூடாது எதிர்காலம், குழந்தைகள் நம்முடைய சந்ததிகள் அழிந்துவிடக் கூடாது என்று பேசிக் கொண்டிருக்கின்றோம். கற்களை கிராமச் சாலையாக இருந்தால் 10 டன், MDR சாலையாக இருந்தால் 6 சக்கர லாரியில் 16 டன் மற்ற சாலைகளில் மாநில நெடுஞ்சாலை, தேசிய நெடுஞ்சாலைகளில் 10 சக்கர லாரி 28 டன், 12 சக்கர லாரிக்கு 36 டன், 16 சக்கர லாரிக்கு 48 டன் கொண்டு செல்ல வேண்டும் ஆனால் இங்கு வே–பிரிட்ஜ்ல் 100 டன் வே– பிரிட்ஜ்தான் உள்ளது எதற்கு 100 டன்? 100 டன் வே–பிரிட்ஜ் உள்ளது காரணம் இங்கே சட்டவிரோதமான முறைகேட்டில் கனிமங்கள் கடத்தப்படுகின்றது எடுத்துச் செல்லப்படுகின்றது. சட்டத்தின் ஆட்சி கரூர் மாவட்டத்தில் இல்லை என்பது எதார்த்தமான நிலையாக உள்ளது.

எனவே இதை அனைத்தையும் கவனத்தில் வைத்துக்கொண்டு இந்தக் குவாரி அமையக் கூடிய புலத்தில் இருந்து 300 மீட்டர் சுற்றளவில் அங்கீகரிக்கப்பட்ட வீடுகள், வீட்டுமனைகள் மற்றும் கூகுள் வரைபடங்கள் உள்ளது. அதுமட்டுமில்லை இங்கே சாலைக்கு 50 மீட்டர் தூரத்தில் இடைவெளி கொடுக்க வேண்டும், 500 மீட்டர் தூரத்தில் பாலங்களுக்கு இடைவெளி கொடுக்க வேண்டும். இங்கே பாலங்கள் அனைத்தும் கிழக்குப்புறம் மற்றும் மேற்குப்புறம் 200 மீட்டர் தூரத்திலே பாலம் இருப்பதை அவர்கள் வைத்திருக்கக்கூடிய படங்களிலேயே தெரிகிறது அதேபோல் எந்தத்துறையினுடைய கடிதத்தையும் இவர்கள் பெறாத அவலநிலைதான் இருக்கிறது அதுமட்டுமல்ல இங்கே உயர்மின்கோபுரம் செல்கிறது அதற்கு 500 மீட்டர் இடைவெளியில் இந்தக் குவாரி இல்லை. இந்தக் குவாரிப் புலத்தை ஒட்டி 50 மீட்டர்

தூரத்திலேயே தாழ்வழுத்த மின்சாரம் செல்கிறது. எனவே இதெல்லாம் விதிகளை மீறிய செயல். தி/ள். சம்பத்குமார் சட்டப்படி இருந்தால் தாராளமாக தூரத்தைக்கூட சரிசெய்துகொண்டு அனைத்தும் செய்து பிளானைக் கொடுத்தால் இங்கு பேசுவதற்கு ஒரு subject டும் இருக்காது. குவாரி நன்றாக நடத்துங்கள் சட்ட விரோதமாக நடத்தாதீர்கள் என்று கூறி சென்றிருப்போம். ஆனால் அனைத்தும் விதிகளை மீறி இருப்பதால் சம்பத்குமார் குவாரிக்கு சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது. SEIAA வில் ஏக்கருக்கு 5 இலட்சம், 10 இலட்சம் கொடுத்தால் அமைச்சருக்கு கொடுத்தால் அனுமதி கொடுக்கிறார்கள். நேரிடையாக குவாரி உரிமையாளர் சங்கத் தலைவரே கூறுகிறார்கள் அப்படி வாங்கிக்கொண்டு வந்தாலும் சட்டவிரோதமான குவாரிகளுக்கு சட்டப்படி நடவடிக்கை எடுத்து மூடப்படும். மக்கள் யாரும் வரவில்லை, மக்களுக்கு சுவரொட்டி அடித்து ஒட்டச் சொல்கிறேன், ஒட்டுவதில்லை. இப்படி பல செய்திகள் உள்ளது. மக்களைப் பொறுத்தவரையில் இந்த மண் பாதுகாக்கப்பட வேண்டும். மக்களுக்குப் புரியாமல் இருந்தால்கூட அதைக்கூற வேண்டியது சமூகப்பொறுப்பில் உள்ள எனது கடமை என்கின்ற அடிப்படையில் எங்கள் பெயரைக்கூறி முதல்வர் ஓட்டு கேட்கிறார். நாங்கள் இங்கு கூறுவது மக்கள் இந்தப் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள் இவர்களின் எதிர்காலத் தலைமுறை பாதித்துவிடக்கூடாது . இவர்கள் குழந்தைகள், பேரன்பேத்திகள் பாதித்துவிடக்கூடாது. எனவே சம்பத்குமார் கல்குவாரி சட்ட விரோதமான முறையில் இயங்கி வருவதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சட்டவிரோதமாக எடுக்கப்பட்ட கற்களுக்கு அபராதம் போடவேண்டும். இந்தக் குவாரிக்கு சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது. ஏற்கனவே தலைமைச் செயலாளர் உத்தரவு கொடுத்து 5 மாதம் ஆகியும் இதுவரை கம்பிவேலி அமைக்கப்படாமல் இருக்கிறது. அதை உடனடியாக அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டு தி/ள். சம்பத்குமார் குவாரி சட்டப்படி இயங்க தகுதி பெற்றதல்ல. எனவே தி/ள். சம்பத்குமார் குவாரிக்கு அனுமதி கொடுக்கக்கூடாது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கு வந்திருக்கும் அதிகாரிக்கு எந்த அதிகாரமும் இல்லை பதிவுசெய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டுக் குழுமம் சென்னை அலுவலகத்திற்கு அனுப்புவதுதான் அவர்கள் வேலை இதில் சட்ட அடிப்படை இருக்கிறதா? கிரிட்டீரியா அடிப்படையில் இருக்கிறதா? இல்லையா? என்பதை பார்த்துத்தான் முடிவு செய்வார்கள் ஒரு வீடு இருந்ததற்காக அமைச்சர் ரகுபதி லட்சுமிபுரத்தில் 2 குவாரி மூடப்பட்டிருந்தது சட்டப்படி இருந்தால் அந்தக்குவாரி இயங்கி இருக்க முடியும் இதை உதாரணத்திற்காக கூறினேன். தி/ள். சம்பத்குமார் குவாரி சட்டப்படி இயங்க வேண்டும் மற்ற குவாரிகளும் அரசிடம் அனுமதி வாங்கி கிரிட்டீரியா அடிப்படையில் குவாரிகள் அமைத்துவிட்டு இயங்கினால் எங்களுக்கு எதுவும் இல்லை. உங்களை வாழ்த்துவோம் திட்டம் அமைக்கக்கூடிய நிறுவனங்கள் பொய்யான ஆவணங்களைக் கொடுத்து உங்களை ஏமாற்றுகிறார்கள் பல்வேறு வகையில் தவறு செய்கிறார்கள். ஆவணங்களை மறைக்கின்ற நிறுவனங்களை கருப்புப் பட்டியலில் சேர்க்க வேண்டும். வரவணை காவல்நிலையத்தில் கிராம நிர்வாக அலுவலர் மீது வழக்குப் பதிந்ததுபோல் கிராம நிர்வாக அலுவலர் தவறான தகவல்களை கொடுத்தற்காக தென்னிலை காவல்நிலையத்தில் வழக்குப் பதிய வேண்டும் என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் இந்தக் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் நடைபெற்ற பொதுமக்களின் கருத்துக்களை வீடியோவாகவும், எழுத்துரு மூலமாகவும் பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்று கூறினார்.

**<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:</u>**

இறுதியாக தனது நன்றி உரையில் இந்த பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்திய மாவட்ட வருவாய் அலுவலர் உள்ளிட்ட அரசு அலுவலர்களுக்கும், காவல்துறையினருக்கும், பத்திரிக்கையாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாகவும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாகவும் தனது நன்றியை தெரிவித்தார். இறுதியாக நாட்டுப்பண் ஒலித்தது. அத்துடன் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் நிறைவு பெற்றது.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**கரூர்.**

**வருவாய் கோட்டாட்சியர்,**
**கரூர்.**